பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 04 2026** **12 40**

வியாழக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களின் பங்களிப்பு காரணமாக நாடு வளர்ச்சி கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தீவிரவாதத்திற்கும், அதற்கு ஆதரவாக செயல்படுவதற்கும் வேறுபாடுகள் கிடையாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. ஆயுஷ்மான் பாரத் திட்டம் ஏழை மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் உறுதியுடன் உள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

5. உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா, யுக்ரைனை வென்றது.

… இனி விரிவான செய்திகள் …

<<<<>>>>

மக்களின் பங்களிப்பு காரணமாக நாடு வளர்ச்சி கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், மக்களின் உழைப்பு காரணமாக வளர்ச்சிக்கான புதிய பாதைகள் வகுக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளமும், வளர்ச்சியின் வேகமும் மக்களின் பங்களிப்பினால் புதிய உயரத்தை எட்டுவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கும், அதற்கு ஆதரவாக செயல்படுவதற்கும் வேறுபாடுகள் கிடையாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த தேசிய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக நமது பாதுகாப்பு படைகள் எப்போதும் தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நமது பாதுகாப்புப் படையின் வலிமை ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகிற்கு உணர்த்தப்பட்டதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் 10 கோடியே 74 லட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருவதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தத் திட்டம் கோடிக்கணக்கான ஏழை மக்களின் வாழ்வில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியதோடு அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், நாட்டு மக்கள் அனைவருக்கும் உயரிய மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு இந்த திட்டத்தை செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஸ்ரீநகர் - ஜம்மு இடையேயான விரிவுபடுத்தப்பட்ட வந்தேபாரத் ரயில் சேவையை மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**Jammu Tawi** ரயில் நிலையத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் ஜம்மு-கஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. அஷ்வினி வைஷ்ணவ், ஸ்ரீநகரில் இருந்து ஸ்ரீமாதா வைஷ்ணவ் தேவி கத்ரா வரை இயக்கப்பட்டு வந்த இந்த ரயில் சேவை தற்போது ஜம்மு தாவி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**8** பெட்டிகளுடன் இயக்கப்பட்டு வந்த ரயில், **20** பெட்டிகளுடன் இயக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ரயிலின் வழக்கமான சேவை வரும் சனிக்கிழமை முதல் தொடங்கும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாக கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றி பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் அயராது பாடுபட்ட பிஜேபி தொண்டர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் சுயமரியாதை சின்னமாக சோம்நாம் கோவில் திகழ்வதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

சோம்நாத் கோவில் தொடர்பான “பெருமை யாத்திரையை” இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இதுபோன்ற யாத்திரையை பிற மாநிலங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த யாத்திரையின் கீழ் ஆயிரத்து 300 பேர் குஜராத்தில் உள்ள சோம்நாத் கோவிலுக்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

இதற்கான சிறப்பு ரயில் சேவையை திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவுடன் இணைந்து தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பிஜேபி ஆட்சியமைக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், புதிய அரசு அமைந்ததும் ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று கூறினார்.

<<<<>>>>

சாதிவாரி கணக்கெடுப்பை தாமதப்படுத்த மத்திய அரசு முயற்சிப்பதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஜெய்ராம் ரமேஷ், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டு ஓராண்டு முடிவடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் இந்தக் கணக்கெடுப்பு எவ்வாறு நடத்தப்படும் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை என்றும் திரு. ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

<<<<>>>>

காப்பீட்டுத் துறையின் வளர்ச்சி சீராக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சமூகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பிற்கான அடித்தளமாக காப்பீடு திகழ்கிறது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காப்பீட்டுத் துறையின் வளர்ச்சியைப் பொறுத்தவரை உலகளவில் இந்தியா 10வது இடத்தில் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து நிதி சேவைகள் துறையின் செயலர் திரு. நாகராஜு இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

முதலீட்டுக்கான வாய்ப்புகளை அதிகரிக்குமாறு அவர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

காப்பீட்டுத் திட்டங்களை வடிவமைப்பதில் புதுமையைப் புகுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

காப்பீடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் டிஜிட்டல்மயமாக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. நாகராஜு வலியுறுத்தினார்.

<<<<>>>>

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள், கருக்கலைப்பு செய்வதற்கு வகை செய்யும் சட்ட திருத்தத்தை கொண்டு வருவது குறித்து பரிசீலிக்குமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்த உச்சநீதிமன்றம், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் 20 வாரத்திற்கும் கூடுதலான கருவைக் கலைக்கும் வகையில் இந்த சட்டதிருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மகளிர் நலனுக்கு எதிராக செயல்படுவதாக உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் குற்றம் சாட்டியுள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையிலும், சட்டப்பேரவையிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை செயல்படுத்தும் நோக்கில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்திருத்தத்திற்கு எதிராக இக்கட்சிகள் வாக்களித்ததை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வளர்ச்சிக்கும் இக்கட்சிகள் தடையாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மகளிர் மேம்பாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியுடன் உள்ளதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<>>>>

சத்தீஷ்கட் சட்டப்பேரவையின் ஒருநாள் சிறப்பு அமர்வு இன்று நடைபெறுகிறது.

மகளிர் மேம்பாடு குறித்தும், மக்களவையிலும், சட்டப்பேரவையிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாகவும் இதில் விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஒடிசாவில் இருந்து மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தல் தொடர்பாக பிஜு ஜனதா தளம் தெரிவித்த புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அறிவுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமாரை சந்தித்து பிஜு ஜனதா தள நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **Sasmit Patra** புகார் மனு சமர்ப்பித்ததையடுத்து தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இரண்டாவது முறை வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டதாக பிஜு ஜனதா தளம் சமர்ப்பித்த புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ராஜஸ்தானில் கார் தீப்பிடித்து எரிந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

தில்லி - மும்பை அதிவிரைவு சாலை வழித்தடத்தில் **Alwar** மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் சென்றுகொண்டிருந்த கார் திடீரென்று தீப்பிடித்து எரிந்ததாகவும், அதில் இருந்த 5 பேர் உடல் கருகி உயிரிழந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் ரஷ்யா உறுதியுடன் உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புதின் அறிவித்துள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற இதுதொடர்பான மாநாட்டில் ரஷ்ய அதிபரின் உரை வாசிக்கப்பட்டது.

அணு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்ற இலக்கினை எட்டுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகிறது என்றும் ரஷ்ய அதிபர் கூறியுள்ளார்.

<<<<>>>>

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 3-2 என்ற ஆட்டக் கணக்கில் யுக்ரைனை வென்றது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் யுக்ரைனுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவின் **Manika Batra, Diya Chitale, Yashaswini Ghorpade** ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**<<<<The End>>>>**